மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது பகிரங்க ரகசியமாக இருந்தது. நான் மேலும் விளக்கம் சொல்ல அவர்கள் வழி வைத்து விட்டார்கள். ''இந்தியா டுடே'' ஏடு, படங்களோடு, அந்த முகாம்களின் படங்களோடு அப்போது வெளியிட்டது. ஆனால் அதை எல்லோரும் ரகசியம் என்று எண்ணிக்கொண்டு இருந்தார்கள். அந்தச் செய்தி அவர்களுக்கு எப்படிக் கிடைத்தது என்றால் ''ரா'' அதிகாரிகளுடைய அலுவலகத்திலேயே மேப்பிலே அந்தப் படத்தைப் போட்டு மாட்டி வைத்திருந்தார்கள். அதைத்தான் 'இந்தியா டுடே' வெளியிட்டிருந்தது. இப்போதும் மாநில அரசுக்கும், மத்திய அரசுக்கும் ஏதாவது ஒரு தகராறு வர வேண்டும் என்று எண்ணிக் கொண்டிருப்பவர்கள்—நான் பகிரங்கமாகவே குற்றம் சாட்டுகிறேன். அன்றைக்கு இலங்கைத் தமிழரிடத்தில் எப்படி ஒரு வேற்றுமையை வளர்ப்பதற்குக் காரணமாக இருந்தார்களோ, அதே ''ரா'' குழுவினர்தான் இன்றைக்கும்—இந்தக் காரியத்தில் ஈடுபட்டு இருக்கிறார்கள் என்பதை பகிரங்கமாகவே சொல்லிக் கொள்ள நான் விரும்புகிறேன். இது இந்தியப் பிரதமர் உணர்ந்து ஏற்ற நடவடிக்கை எடுக்க வேண்டிய ஒன்றாகும்.

3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

தஞ்சை மாவட்டம் நந்தமங்கலம் கிராமத்தில் இரு வகுப்பினரிடையே ஏற்பட்ட கலவரம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. கோ. வீரையன், திரு. சோ. அழகர்சாமி, திரு. ஜி. பழனிச்சாமி, திரு. ரெ. பிச்சைமுத்து, திரு. ஆர். சிங்காரம் ஆகியோர் ''தஞ்சை மாவட்டம், திருவையாறு வட்டம் ஒரத்தூர் கிராமத்தில் 5-5-1990 அன்று இரு வகுப்பினருக்கிடையே நடந்த மோதலில் ஒருவர் கவலைக்கிடமாக இருப்பது மற்றும் அதனால் அந்தப் பகுதியில் ஏற்பட்ட சூழ்நிலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும்'' என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு முன் அறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இதுகுறித்து திரு. துரை சந்திரசேகரன் அவர்கள் ஒரு கவன ஈர்ப்பும் கொடுத்திருக்கிறார்கள். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து மிகச் சுருக்கமாகக் கூறும்படி திரு. வீரையன் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம், திருவையாறு வட்டம், ஒரத்தூரில் நந்தமங்கலம் என்ற கிராமத்தில் அரிசனத் தெருவில் 21-3-1990 அன்று ஒரு இறுதிச் சடங்கு நடந்தபோது அரிசனங்களுக்கும், அங்கே இருக்கக் கூடிய மிராசுதாரர்களுக்கும் சிறு தகராறு ஏற்பட்டது. இதுகுறித்து அரிசனங்கள் தரப்பிலே ஒரு

புகார் மனு காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்டது. அதன்மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அதே நேரத்தில் இதுகுறித்து மிராசுதாரர்கள் தரப்பிலே ஒரு புகார் மனு கொடுக்கப்பட்டது. அதன்மீது நடவடிக்கை எடுத்து விவசாயத் தொழிலாளர்கள், அரிசனங்கள் 6 பேர் கைதுசெய்யப்பட்டு ஒரு வழக்கும் பதிவு செய்யப்பட்டது. இதுகுறித்து வந்த புகார்களின் மீது திருவையாறு வட்டாட்சியர் அவர்கள் ஒரு சமாதான கமிட்டி போட்டு இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண முயற்சித்தார்கள். 30-4-1990-ல் ஒரத்தூர் அரிசனத் தெருவைச் சேர்ந்த ஒருவரை, அதாவது, அங்கே தபால் நிலையத்திற்கு வந்த நச்சினார்க்கினியர் என்ற ஒருவரை மிராசுதாரர்களைச் சேர்ந்த 20 பேர்கள் அரிவாளுடன் வெட்டுவதற்கு விரட்டி இருக்கிறார்கள். இது குறித்து திருக்காட்டுப்பள்ளி காவல் நிலையத்தில் புகார் மனு கொடுக்கப்பட்டது. 30—4—1990இல் அவ்வாறு கொலை செய்ய விரட்டிய அந்த நடவடிக்கை குறித்து கொடுக்கப்பட்ட அந்தப் புகார் மீது எந்த நடவடிக்கையும் இதுவரையில் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

10-30 மணி

இதற்கிடையில், அந்த ஒரத்தூர் கிராமத்தில் ஒரு பதட்டமான நிலை இருப்பதை அறிந்து போலீஸ் காவலும் அங்கே போடப்பட்டிருக்கிறது. இந்த நச்சினார்க்கினியன் என்பவரை வெட்ட விரட்டியதை அங்கே காவலுக்கு இருந்த போலீஸ்காரர்களும் நன்றாக அறிவார்கள். அவர்களுக்கும் தெரியும். அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் மீண்டும் 2—5—1990இல் திருவையாறு வட்டாட்சியர் அலுவலகத்தில் இரு தரப்பாரையும் வைத்துப் பேசி ஒரு சமாதான முயற்சிக்காக வட்டாட்சியர் அவர்கள் நடவடிக்கை எடுத்தார்கள். இதை ஏற்று. அரிசனங்களுடைய பிரதிநிதிகள் திருவையாறு வட்டாட்சியர் அலுவலகத்திற்கு வந்துவிட்டார்கள். ஆனால், மிராசுதார்கள் தரப்பிலிருந்து யாரும் வரவில்லை. வட்டாட்சியர் ஆள் அனுப்பி மீண்டும் 5—5—1990 அன்று மதியம் சமாதானம் பேசவேண்டுமென்று இருதரப்பாரிடமும் கையெழுத்து வாங்கப்பட்டு, 5ஆம் தேதி மாலை 3 மணிக்குப் பேச்சுவார்த்தை நடப்பதாக இருந்தது. இதற்கிடையில்தான் 5ஆம் தேதி காலை 5 மணிக்கு கோவிந்தராஜன், அன்பழகன், அம்பலம், அசோகன், பன்னீர்செல்வம், ராமையன் என்ற அந்த ஊராட்சி மன்றத் தலைவர் இவர்களுடைய தலைமையில் ஏறத்தாழ 200க்கு மேற்பட்டவர்கள், ஊருக்குள் புகுந்து, கார்களிலும், வேன்களிலும் பயங்கரமான ஆயுதங்களுடன் அந்தத் தெருக்களில் நுழைந்து இருக்கிறார்கள். அப்போது அங்கே பாதுகாப்புக்கு இருந்த காவலர்கள் அங்கே செல்லக்கூடாது என்று தடுத்ததையும் மீறி, அந்தக் காவலர்களையும் அவர்கள் அச்சுறுத்திவிட்டு, அந்தத் தெருவுக்குள் புகுந்திருக்கிறார்கள்.

[திரு. கோ. வீரையன்] [1990 மே 8

அது ஏறத்தாழ 20 ஆண்டுக்காலமாக எங்கள் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் இருக்கக்கூடிய ஒரு தெருவாகும். அந்தத் தெரு முனையில் சங்க அலுவலகம் இருக்கிறது. அந்த அலுவலகத்தையும் அடித்து நொறுக்கிவிட்டு தீயிட்டுக் கொளுத்திவிட்டு, கட்சிக் கொடி மரத்தையும் வெட்டிச் சாய்த்துவிட்டு, தெருவில் தூங்கிக்கொண்டிருந்தவர்களை தாக்கி, வீடு வீடாகப் புகுந்து அடித்து தாக்கியதில் 3 பெண்கள் உட்பட 24 பேர் படுகாயப்படுத்தப் பட்டிருக்கிறார்கள். அந்த 24 பேரையும் தஞ்சை மருத்துவ மனைக்குக் கொண்டு சென்றிருக்கிறார்கள். இதில், கலியபெருமாள் என்பவரின் நிலைமை மிகவும் கவலைக்கிடமாக இருக்கிறது. அந்தப் பகுதியில் உள்ள ஏழை ஆதி திராவிட விவசாயத் தொழிலாளர்கள் மத்தியில் இதனால் பீதியும் பதட்டமும் ஏற்பட்டிருக்கிறது. காவலர்களின் தடையையும் மீறி மிராசுதார்களால் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது. சமாதானப் பேச்சு நடந்துவிட்டால் அவர்களைத் தாக்க முடியாது என்ற காரணத்திற்காக, காலையிலேயே இந்தத் தாக்குதலைத் திட்டமிட்டு நடத்தியிருக்கிறார்கள். தற்செயலாக நடந்த தாக்குதல் அல்ல. எனவே, அந்தப் பகுதியில் இருக்கிற ஏழை மக்களின் உயிருக்கும், உடமைக்கும் பாதுகாப்பற்ற நிலைமை அங்கே இருக்கிறது. சம்பந்தப்பட்ட அந்த எதிரிகள் திட்டமிட்டு இந்தத் தாக்குதலை நடத்தியிருக்கிறார்கள். அதற்குரிய நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்பது அவர்களுடைய கோரிக்கை. எனவேதான், அந்தப் பகுதியில் ஏழை விவசாயத் தொழிலாளர்களுக்கு மிராசுதார்களிடமிருந்து வரக்கூடிய அச்சுறுத்தல்கள், தாக்குதல்கள், இவைகளால் 24 பேர் படுகாயப்படுத்தப்பட்டு, அதிலே கலியபெருமாள் என்பவர் தஞ்சை மருத்துவமனையில் கவலைக்கிடமாக இருக்கிறார். இந்த நிலைமையைப் பற்றி விவாதிப்பதற்காக, இந்த அவையின் பிற நிகழ்ச்சிகளை ஒத்திவைத்து, இந்தப் பிரச்சினையை விவாதிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

திரு ஜி. பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு முன்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. வீரையன் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, திருவையாறு பகுதியில் நடந்திருக்கக்கூடிய சம்பவம்—பொதுவாக தஞ்சை மாவட்டத்தில் விவசாயத் தொழிலாளர்களுக்கும் மிராசுதார்களுக்கும் அனேகமாக கூலிப் பிரச்சினையில்தான் எழுமே தவிர, இப்படிப் பட்ட பிரச்சினையில் எழுவது என்பது கிடையாது. இருந்தாலும் இதுபோன்ற பிரச்சினைகள் வருகிறபோது, காவல்துறைக்குக் காலத்தோடு புகார் கொடுத்தால், உடனடியாக அதைக் கூப்பிட்டு விசாரித்து அதற்கான நடவடிக்கை எடுக்காமல் சம்பவம்

நடப்பதற்கு இது ஒரு வாய்ப்பாக காவல் துறையே அமைந்து விடுகிறது என்பதைப் பார்க்கிறோம். அதோடு மட்டுமல்ல, பொதுவாக இப்படிப்பட்ட பிரச்சினைகள் வரும்போது, அங்கே இருக்கக்கூடிய வட்டாட்சியர்கள் அமைதிக் குழுவை அமைத்து, இரு தரப்பாளர்களையும் கூப்பிட்டுப் பேசி, அதன் மூலமாக பிரச்சினையைத் தீர்த்து வைக்கலாம் என்ற நம்பிக்கையில் இருக்கிறார்கள். அதனால், விவசாயத் தொழிலாளர்களாக இருக்கக்கூடியவர்கள் அனேகமாக எதையும் எதிர்பார்க்காமல், திட்டமிடாமல் அந்தப் பிரச்சினை தீர்ந்துவிட்டது என்று ஊருக்குத் திரும்புகிறபோது, திட்டமிட்டு இப்படிப்பட்ட கலவரத்தை நடத்தி, அந்த அரிசன மக்களை அடக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு இப்படிப்பட்ட சதிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன என்பதற்காக அந்த அமைதிக் குழு ஒரு காரணமாக அமைந்துவிடுகிறது. ஆகவே, அவர்களுக்கு, அவ்வாறு தவறு செய்பவர்கள் மீது, அந்தக் குற்றவாளிகள் மீது, உரிய நடவடிக்கை எடுத்திருந்தால், இப்படிப்பட்ட சம்பவங்கள் தடுத்திருக்கப்பட முடியும். ஆகவே, அதற்குரிய நடவடிக்கையை எடுப்பதற்கு சபையை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

10-35 மணி.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே தஞ்சை மாவட்டம் ஒரத்தூரில் நடந்த நிகழ்ச்சிகள் பற்றி முன்பே ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். இது குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் வீரையன் அவர்களும், பழனிச்சாமி அவர்களும் மிகத் தெளிவாக இங்கே குறிப்பிட்டார்கள். ஆனால், அதே நேரத்தில் ஒரு மாறுபட்ட ஒரு நடவடிக்கை என்னவென்றால் ஒரு டாக்சி வருகிறது. அந்த டாக்சியிலே... (மணியடிக்கப்பெற்றது) அதே நிகழ்ச்சிதான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வர்ணனையா ?

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வர்ணனை ஒன்றும் கிடையாது. யதார்த்த நிலையினைச் சொல்கிறேன். அந்த டாக்சியிலே ஏறுகின்ற போது 10 பேர் ஏற முயற்சிக்கிறார்கள். ஆனால், அந்த டிரைவர், 10 பேர் ஏற முடியாது, ஒரு குறிப்பிட்ட 4, 5 அல்லது 6 பேர் ஏறுங்கள் என்று சொல்கிறார். ஆனால், அது முடியாமல் போகவே, இரு சாராருக்கும் விவகாரம் ஏற்பட்டு அந்த டிரைவரை அடித்துவிட்டார்கள். அந்த டிரைவர் ஒரு குறிப்பிட்ட கட்சியைச் சேர்ந்தவர். ஆகவே, அந்தக் கட்சிக்காரர்கள் எல்லாம் சேர்ந்து அவரை ஆதரிக்க, எதிரானவர்கள் மற்றவர்களை ஆதரிக்க, என்பன போன்ற கலவரங்களும், அவர்கள் சொன்ன நிகழ்ச்சியோடு இதனையும் சேர்த்துச் சொல்கிறேன்,

இப்படிப்பட்ட சூழ்நிலையில் உடனடியாகப் போலீசுக்குப் புகார் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், புகார் செய்த உடன் போலீசார் நடவடிக்கை உடனடியாக எடுக்கவில்லை. அப்படி நடவடிக்கை எடுத்திருந்தால் நிச்சயமாக இந்த நிகழ்ச்சி நடந்திருக்காது.

மாண்புமிகு உறுப்பினர் விவசாயத் தொழிலாளர் பிரச்சினை என்று சொன்னார்கள். கம்யூனிஸ்ட் கட்சிக்காரர்களுக்கும், காங்கிரஸ், தி.மு.க., அ.தி.மு.க. போன்ற ஏனைய கட்சிகள் எல்லாம் ஒன்றாகச் சேர்ந்து அங்கே கம்யூனிஸ்ட் கட்சிக்காரர்களுக்கும் இவர்களுக்கும் தான் விவகாரம் ஏற்பட்டிருக்கிறது. ஆனால், ஆன பிறகு ஆதி திராவிடர்கள், இந்துக்கள் என்று, இங்கே மிராசுதார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் நிகழ்ச்சி அப்படி அல்ல. அங்கே நடந்த நிகழ்ச்சி ஆதி திராவிடர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமை அல்ல. ஆனால், ஆரம்பிக்கப்பட்ட நிகழ்ச்சி ஒரு கட்சியின் அடிப்படையில் ஆரம்பிக்கப்பட்டது. அது ஆதி திராவிடர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமை என்று வர்ணிக்கப்படுகிறது. அது அல்ல. ஆதி திராவிடர்களுக்குக் கொடுமை என்று சொன்னால், என்னுடைய உயிரையும் நான் கொடுக்கத் தயாராக இருக்கிறேன். ஆனால் அதற்குப் பிறகு நடந்த நிகழ்ச்சியில் 20க்கும் மேற்பட்ட ஆதி திராவிடர்கள் வெட்டப்பட்டிருக்கிறார்கள். ஒருவர் மிக சீரியசாக இருக்கிறார். அந்த நிலையைப் போக்குவதற்கு உடனடியாக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளைப் பற்றியும் இங்கே விவரித்தார்கள். ஆகவே, அதையே நானும் விவரிக்கத் தயாராக இல்லை. உடனடியாக மேற்கொண்டு இத்தகைய நிகழ்ச்சிகள் நடைபெறாமல் இருக்க அனைத்துக் கட்சிகளையும் கொண்ட ஒரு குழுவை அமைக்க வேண்டும். அந்த பீஸ் கமிட்டி ஒரு பெரிய அதிகாரியின் கீழ் நடத்தப்பட வேண்டும். தொடர்ந்து விவகாரம் ஏதும் இல்லாமல் அமைதியாக இருக்க ஆவன செய்வது குறித்து இந்த அவையில் விவாதிப்பதற்காக அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்துவிட்டு இது குறித்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒத்திவைப்புத் தீர்மானத்திலே பேசிய நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சிங்காரத்தினுடைய பேச்சைக் கேட்ட பிறகு, இதை உள்ளபடியே ஒத்திவைத்து விவாதம் நடத்தினால் அங்கே புகைந்து கொண்டிருப்பது எரியத் தொடங்கிவிடுமோ என்ற அச்சம் எனக்கு ஏற்பட்டிருக்கிறது. இருந்தாலும், இதை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதற்கான சில குறிப்புகளை இந்த அவையின் முன்னாலே வைக்க விரும்புகிறேன்.

1990 மே 8] [டாக்டர் மு. கருணாநிதி]

தஞ்சை மாவட்டத்தில் தோகூர் காவல் சரகத்தில் ஒரத்தூர், நந்தமங்கலம் ஆகிய இரண்டு கிராமங்களும் அருகருகே உள்ளன. இரண்டு கிராமங்களையும் சேர்ந்த தாழ்த்தப்பட்டவர்கள் ஆயிரம் குடும்பத்தினர் அங்கே உள்ளனர். ஒரத்தூரில் பிற்படுத்தப் பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த 1,500 குடும்பத்தினர் உள்ளனர். இருவரும் ஒருவொருக்கொருவர் தாண்டிக் கொண்டுதான் கடை களுக்கோ, வேறு இடங்களுக்கோ செல்ல வேண்டுமென்றால் செல்ல வேண்டும். கடந்த 21—3—1990 அன்று ஒரத்தூர் கிராமத்தில் வடமலை என்பவருடைய மனைவி, தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த பெண் மரணம் அடைந்தது தொடர்பாக இறுதிச் சடங்கிற்கு வந்த 10 பேர் டி.சி.ஒ. 2332 என்ற வாட கைக் காரில் திரும்பியபோது, காரின் உரிமையாளர் ரத்தினசாமி என்பவரின் தம்பி சுதர்சன் என்பவர் அத்தனை பேரும் காரில் ஏறியதற்காகக் கண்டித்திருக்கிறார். ஒரத்தூரைச் சேர்ந்த தர்மராஜ், நந்தி என்கிற ராஜசேகர் ஆகியோர் தாழ்த்தப்பட்ட மக்களைக் கையால் அடித்துவிட்டனர். இது தொடர்பாக, சுதர்சன் கொடுத்த புகாரின் பேரில் தோகூர் காவல் நிலைய எண் 57/90, இ.த.ச. 341 மற்றும் 323 பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்து விசாரணை செய்யப்பட்டது.

இறுதிச் சடங்கிற்கு வந்தவர்கள் பின்னால், வாடகைக் கார் வேண்டாம் என்று கூறிவிட்டு பூதலூர் புகைவண்டி நிலையத்திற் குச் சென்றுவிட்டார்கள். சுதர்சன் தாக்கப்பட்டதால் ஆத்திரம் அடைந்து அவரைச் சேர்ந்த மக்கள் புகைவண்டி நிலையம் சென்று அங்கே புகைவண்டிக்காகக் காத்திருந்தவர்களைக் கண்டித்திருக் கிறார்கள். அது தொடர்பாகக் காவல் நிலையத்திற்கு எந்தப் புகாரும் தரப்படவில்லை. இத்தனை குழப்பத்தோடு நச்சினார்க் கினியன், தர்மராஜன், முருகேசன், கிருஷ்ணன், குணசேகரன் ராஜசேகரன் ஆகியோர் வேணுகோபால் என்பவரை அடித்துக் காயப்படுத்தியிருக்கிறார்கள். அது குறித்து வேணுகோபால் கொடுத்த புகாரின் பேரில் குற்ற எண் 58/90, 147, 148, 323 இ.த.ச. பிரிவுகளின்கீழ் வழக்குப் பதிவு செய்து விசாரிக்கப்பட் டிருக்கிறது. குற்ற எண் 57/90 மற்றும் 58/90 வழக்குகளில் சம்பந்தப்பட்ட எதிரிகளும் கைது செய்யப்பட்டு ரிமாண்ட் செய் யப்பட்டுள்ளார்கள். அமைதிக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. எதுவுமே செய்யவில்லை என்று குற்றம் சாட்டியதற்கு விளக்கமாகச் சொல்கிறேன். எதிரிகள் கைது செய்யப்பட்டு ரிமாண்ட் செய்யப்பட்டுள்ளனர். அமைதிக் கூட்டத்திற்கு ஏற் பாடு செய்யப்பட்டது, இரண்டு கிராமங்களுக்கும் போலீஸ் பாது காப்பும் போடப்பட்டிருந்தது.

10-40 மணி

இருந்தபோதிலும் இரண்டு பிரிவினரிடையே விரோத மனப் பான்மை வளர்ந்து வந்தது. 30—4—1990 அன்று இரவு 11 மணிக்கு நச்சினார்க்கினியன், காவல் நிலையத்திற்கு வந்து, தான்

தபால் அலுவலகத்திற்குச் சென்றுகொண்டிருந்தபோது, கலை யழகன் மற்றும் 7 பேர் தன்னை விரட்டியதாகக் கொடுத்த புகார் மீது குற்ற எண் 70/90, இ.த.ச. 147, 148, 506 (1) பிரிவுகளின்கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு, விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. திருக்காட்டுப்பள்ளி ஆய்வாளர் சம்பவம் நடந்த இடத்திற்குச் சென்று, விசாரணை செய்தார். 5—5—1990 அன்று திருவையாற்றில் இரண்டு பிரிவினரையும் அழைத்துவைத்து, வட்டாட்சியர் ஒரு அமைதிக் கூட்டம் நடத்த ஏற்பாடு செய்திருந்தார்கள். அதற்கிடையில் 5—5—1990 அன்று அதிகாலை 5 மணிக்கு ஒரத்தூரைச் சேர்ந்த ஒரு கூட்டத் தினர் பயங்கர ஆயுதங்களோடு ஒன்று சேர்ந்து, நந்தமங்கலம் கிராமத்திலிருந்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத் தின் கீற்றுக் கொட்டகையைச் சேதப்படுத்தி, தீ வைத்துக் கொளுத்தி இருக்கிறார்கள். நச்சினார்க்கினியன் போன்றவர் களின் குடியிருப்புகளில் புகுந்து 18 கூரை வீடுகளையும், 8 ஓட்டு வீடுகளையும் சேதப்படுத்தியதோடு, கத்தி, கம்பு, அரிவாள் முதலிய ஆயுதங்களால் காயப்படுத்தி இருக்கிறார்கள். இவர் களில் 12 பேர் திருக்காட்டுப்பள்ளி அரசு மருத்துவமனையில் வெளி நோயாளிகளாக சிகிச்சை பெற்றார்கள். 10 பேர் உள் நோயாளிகளாக சிகிச்சை பெற்றார்கள். அம்பேத்கார் மக்கள் நற்பணி மன்றம் அமைந்திருந்த ஓட்டு வீடும் சேதமடைந்துள்ளது. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, மற்றும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி ஆகிய கட்சிகளின் கொடிக் கம்பங்களும் சேதப்படுத்தப் பட்டன. இந்தச் சம்பவங்களின் தொடர்பாக 4 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்த வழக்குகளில் எதிரிகள் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

சம்பவம் பற்றித் தகவல் தெரிந்தவுடன் தஞ்சை காவல் துறைக் கண்காணிப்பாளர் அவர்கள் சம்பவம் நடந்த இடத்திற்கு விரைந்து சென்று தகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்துள் ளார். தஞ்சை சப்-கலெக்டரும் சம்பவம் நடந்த இடத்திற் குச் சென்று விசாரித்துள்ளார். மீதமுள்ள எதிரிகளை விரைவில் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும், கிரா மத்தில் தேவையான காவல் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. நிலைமை இப்போது சகஜமாக உள்ளது. மேலும், கண்காணிக் கப்பட்டு வருகிறது. இதிலே வேடிக்கை என்னவென்றால் இரு தரப்பிலே, ஒரு தரப்பிலே நச்சினார்க்கினியன், இன்னொரு தரப் பிலே கலையழகன், தமிழ்ப் பெயருக்கு ஒன்றும் குறைவில்லை. ஆனால், தகராறுதான் ஓயவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச் சரவர்களின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல் களை ஒத்திவைத்து, இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவை யில்லை என்பதால் இதற்கு இசைவு மறுக்கப்படுகிறது.